Crl.Misc.39

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.I, KARUR

C.C. No. 145/2023

Prosecution PW 7

Deposition of Witness for Defence

Court

Name : சந்திரசேகரன்

Father's Name : சாமுவேல்

Village :

Taluk :

District :

Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1969 of the day of 19.11.2025

**1ம் எதிரி ஆஜர். 2ம் எதிரி ஆஜரில்லை. 317 குவிமுச மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது,**

**முதல் விசாரணை**

நான் தற்போது க.பரமத்தில் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணியாற்றி வருகிறேன். 25.3.2021ம் தேதி பசுபதிபாளையம் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பொறுப்பேற்ற பின்பு கு.எண்.569/2020 வழக்கின்

மேல்விசாரணைக்கு என் பார்வைக்கு வைத்ததை நான் புலன்விசாரணைக்கு எடுத்துக் கொண்டு வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றம் அனுப்பி வைத்தேன். **படிவம் 91 அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. **ரீப்பர் கட்டை ஒன்று அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் எனது புலன்விசாரணை முடித்து எதிரிமீது குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

முதல் தகவல் அறிக்கை 28.8.2020 ம் தேதி பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். படிவம் 91 மற்றும் குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட தேதி 13.4.2022 என்றால் சரிதான். 18 மாத காலதாமதமாக மேற்படி குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி காலதாமதத்திற்கான காரணம் எதிரி தலைமறைாக இருந்து வந்ததால் காலதாமதம் ஏற்பட்டது.

என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு சரியென ஒப்புக் கொண்டு என் முன் கையெழுத்து செய்தார்.

**ஒம்./-எஸ்.பி.பரத் குமார்**
**நீதித்துறை நடுவர் எண்.1, கரூர்**